118.

# திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.க.கோபால கிருஷ்ணன், B.E.,

ந.க.எண்.2266/2020/திருவள்ளூர்-2 நாள்.05.02.2021.

பொருள்: மனைப்பிரிவு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - திருவள்ளூர் மாவட்டம் - திருத்தணி வட்டம் / நகராட்சி / உள்ளூர் திட்டக்குழும பகுதி - அகூர் குருப் அமிர்தாபுரம் கிராமம் - சர்வே எண்கள்.50/4B1, 80, 81, 82, 83, 84, 85 மற்றும் 90-ல் 0.65.17 ஹெக்டேர் அல்லது 1.61 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை:
1. ஆணையாளர், திருத்தணி நகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.700/2020/எப்1, நாள்.18.09.2020.
2. மனுதாரர் திருமதி. ரீத்தா ஜான்சன், அவர்களின் கடிதம் நாள்.27.11.2020 மற்றும் Online Application No.202005401018712, நாள்.01.11.2020.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.19696/2020/TCP-7, நாள்.08.01.2021.
4. அரசாணை (Ms) எண்.134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.09.2002.
5. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 14619/1988/பிசிசி, நாள்.27.04.1988.
6. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 40483/1990/எல்ஏ1, நாள்.07.11.1992.
7. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 16985/2000/எல்ஏ2, நாள்.29.09.2007.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014.
9. இவ்வலுவலக கடிதம், இதே எண், நாள்.11.01.2021.(சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரியது).
10. மனுதாரர் கடிதம், நாள்.29.01.2021 (தானப்பத்திர எண்.266/2021, நாள்.25.01.2021 பெறப்பட்டுள்ளது.)
11. இவ்வலுவலக கடிதம் இதே எண்.நாள்.02.02.2021 நன்னிலை வரி, OSR கட்டணம் மற்றும் பரிசீலனை கட்டணம் கோரியது ).
12. மனுதாரர், திருமதி. ரீத்தா ஜான்சன், அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள், நாள்.04.02.2021 (நன்னிலை வரி, OSR கட்டணம் மற்றும் பரிசீலனை கட்டணம் செலுத்தியது ).
13. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.
14. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.12201/2017/சி.பி, நாள்.28.09.2017.
15. அரசாணை (நிலை) எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.09.12.2020.

*****

**உத்தரவு :**

1. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம் / நகராட்சி / உள்ளூர் திட்டக்குழும பகுதி, அகூர் குருப் அமிர்தாபுரம் கிராமம், சர்வே எண்கள்.50/4B1, 80, 81, 82, 83, 84, 85 மற்றும் 90-ல் 0.65.17 ஹெக்டேர் அல்லது 1.61 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனை இடத்தில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபட ஒப்புதலுக்கு, பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட கடிதங்களுடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், பார்வை 3-ல் கண்ட நகர் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க கீழக்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

2. இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு **ம.வ./மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்)எண்.26/2021** என எண்ணிடப்பட்டு, இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. பார்வை 10-ல் காணும் கடிதம் மூலம் சாலை (ம) உள்ளாட்சிக்குரிய பொது ஒதுக்கீடுகள் மின்வாரியத்திற்கான பொது ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கான தானப்பத்திர அசல் பெறப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், பார்வை 12-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி **ரூ.15,000/-(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்), OSR கட்டணம் ரூ.5,57,000/-(ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பத்தேழாயிரம் மட்டும்) மற்றும்** பரிசீலனைக் கட்டணம் **ரூ.10,600/-(ரூபாய் பத்தாயிரத்து அறுநூறு மட்டும்)** ஆகியவை செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

4. மேலும், பார்வை 5, 6 மற்றும் 7-ல் சுட்டிய, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 4-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலைகளை மனுதாரரிடமிருந்து தானப் பத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை நகராட்சிக்கு ஒப்படைத்த பின்னரும், மேலும், மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும், இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.71 RDLA dated:16.06.2003 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

8. பார்வை 10-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு ஊராட்சி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் இடத்தினை தனி புல உட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

9. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட **ஆணையாளர், திருத்தணி நகராட்சி அவர்களால்** ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

10. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள் :**

1. பார்வை 8-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர். சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி. நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில் "நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

Geetha

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

3. பார்வை 13-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. பார்வை 14-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority".

5. பார்வை 15-ல் காணும் அரசாணையின்படி உள்ளாட்சியால் கீழ்கண்ட விபரங்கள் உறுதிசெய்யப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**"Local Bodies shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays for tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, Provide necessary street lights etc, as per the standards specified by the local body".**

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

**இணைப்பு :**

1. வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் -2 தொகுப்பு.
2. தானப்பத்திரம் அசல்.

OWb 05/02/2021

**பெறுநர் :**

ஆணையாளர்,
திருத்தணி நகராட்சி,
திருத்தணி.

**நகல் :**

1. திருமதி.ரீத்தா ஜான்சன்,
எண்.03, J.R. டவர்ஸ்,
சந்திரபாக் அவின்யூ முதல் சந்து,
மைலாப்பூர், சென்னை - 600 004

2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை-02,
அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் மற்றும்
மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மாவட்டம்.
மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

திருத்தணி நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்.
முன்னிலை : திரு.பு.ரா.பாலசுப்பிரமணியம், எம்.ஏ.,

ந.க.எண். **700 /2020 /**எப்1 நாள். **16.04.2021**

பொருள் : மனைப்பிரிவு – திருத்தணி நகராட்சி – அமிர்தாபுரம் கிராம சர்வே எண். 50/4B1, 80, 81, 82, 83, 84, 85, 90–ல் **1.61** ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச மனைப்பிரிவிற்கு – இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. திருமதி. ரீத்தா ஜான்சன், க/பெ.A.ஜான்சன், நெ.03, J.R. டவர்ஸ், மைலாப்பூர், சென்னை அவர்களின் கடிதம் நாள்.02.07.2020.
2. நகர் மற்றும் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம், அவர்களின் கடிதம் ந.க.எண்.**2266/2020/**திவம2 நாள். 11.01.2021.
3. திருத்தணி சார் பதிவாளர் அலுவலக தானப்பத்திர பதிவு எண்.266/2021 நாள்.25.01.2021.
4. நகர் மற்றும் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம், அவர்களின் கடிதம் ந.க.எண்.**2266/2020/**திவம2 நாள். 05.02.2021.
5. இந்நகர்மன்ற தீர்மானம் எண்.047, நாள்.25.02.2021.
6. திருத்தணி நகராட்சி ஆணையர் அவர்களின் சான்று நாள்.15.04.2021.
7. இந்நகராட்சி கருவூல பற்றுச் சீட்டு எண்.013/01/2/21–22/0000180 நாள்.12.04.2021.

*************

உத்திரவு :–

திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட அமிர்தாபுரம் கிராம சர்வே எண். 50/4B1, 80, 81, 82, 83, 84, 85, 90–ல் **1.61** ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி, பார்வை **1**–ல் காணும் திருமதி. ரீத்தா ஜான்சன், க/பெ.A.ஜான்சன் அவர்கள் விண்ணப்பித்துள்ளார். பார்வை **2**–ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், திருவள்ளூர் அவர்களின் கடிதத்தில் சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு, சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களினை, ஆணையாளர், திருத்தணி நகராட்சி அவர்களின் பெயரில் தானப்பத்திரம் பதிவு செய்து, ஒப்படைப்பு செய்திட தெரிவித்துள்ளபடி, பார்வை 3–ல் காணும் திருத்தணி சார் பதிவாளர் அலுவலக தானப்பத்திர பதிவு எண்.**266/2021**, நாள்.25.01.2021–ன்படி தானப்பத்திரம் வரப்பெற்றுள்ளது.

பார்வை **4**–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில், ம.வ/மா ந.ஊ.உ.இ (திருவள்ளூர்) எண்.**26/2021** எண்ணிடப்பட்ட மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது எனவும், மேலும் மனுதாரர் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி ரூ.**15,000**/–, OSR கட்டணம் ரூ.5,57,000/– மற்றும் பரிசீலனைக் கட்டணம் ரூ.**10,600**/– செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவில் உள்ளவாறு சாலை, குடிநீர், தெருவிளக்கு மற்றும் வடிகால் வசதிகளை செய்து, மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து, அதனை நகராட்சிக்கு ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.



Reetha

அதனை தொடர்ந்து ஆணையாளர், திருத்தணி நகராட்சி அவர்கள் நேரில் ஆய்வு செய்து பொறியியல் பிரிவில், சாலையின் நிலை குறித்த தகுதி சான்று பெறப்பட்டபின், இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதால், பார்வை 6–ல் காணும் தகுதி சான்று பெறப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர் சாலை அமைப்பு மற்றும் வடிகால் வசதி மற்றும் தெருமின்விளக்குகள் புகைப்படம் பெறப்பட்டு, பொறியாளர் அவர்களால் உறுதி செய்யப்பட்டு, ஆய்வு அறிக்கை நாள்.31.03.2021–ல் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவில் மின்கம்பங்கள் அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான கட்டணம் ரூ.69,830/– மற்றும் ரூ.2218/– 25.03.2021 அன்று செலுத்தப்பட்டு, இரசீது நகல் பெறப்பட்டது எனவும், நகராட்சி கருவூலத்தில் குடிநீர் இணைப்பிற்காக வைப்புத் தொகை, பொறியியல் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூ.3,00,000/– நாள்.19.03.2021 மற்றும் மின் இணைப்பு வைப்புத் தொகை ரூ.25,000/– நாள்.19.03.2021–ன்படி வைப்புத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களின் கடிதம் மற்றும் வரைபடம் நகல் எண்.2266/2021/திவம2 நாள்.05.02.2021–ன்படி, நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெறப்பட்டு வரப்பெற்றுள்ளதனை, பார்வை 5–ல் காணும் இந்நகர் மன்ற தீர்மானம் எண்.047, நாள்.25.02.2021–ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவு அனுமதி கட்டணத்திற்கான அறிவிப்பு வழங்கியதை தொடர்ந்து, பார்வை 7–ல் காணும் செலுத்து சீட்டின்படி, மனைப்பிரிவு அனுமதி கட்டணம், நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே 1920–ன் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 176 (3)–ன்படி திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட அமிர்தாபுரம் கிராம சர்வே எண். 50/4B1, 80, 81, 82, 83, 84, 85, 90–ல் 1.61 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச மனைப்பிரிவிற்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையர் 16/4/21
திருத்தணி நகராட்சி.

16/4/2021

16/4/2021

இணைப்பு :

1. மனைப்பிரிவு வரைபடம்
2. மனைப்பிரிவு மற்றும் சிறப்பு நிபந்தனைகள்.

பெறுநர்:

திருமதி. ரீத்தா ஜான்சன்,
க/பெ.A.ஜான்சன்,
நெ.03, J.R. டவர்ஸ்,
சந்திரபாக் அவின்யூ முதல் சந்து,
மைலாப்பூர், சென்னை.

நகல் :

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர்.
2. நகராட்சிப் பொறியாளர், திருத்தணி நகராட்சி (வரைபட நகல் மற்றும் தான சாசன நகலுடன்) மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலையினை சொத்துப்பதிவேடு மற்றும் சாலைகள் பராமரிப்பு பதிவேடு ஆகியவற்றில் பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. நகரமைப்பு ஆய்வர் பொது திறவிடம் ஒதுக்கீடு இட விவரத்தினை சொத்துகள் பதிவேட்டில் பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Reetha